

வருடாந்த செயற்றிறன் அறிக்கை 2021

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

செலவினத் தலைப்பு : 280

2021 வருடத்திற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல : 280

அத்தியாயம் 01 – நிறுவன விபரம்/நிர்வாக சுருக்கம்

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 – திரட்டிய வருடாந்த நிதிச் செயற்பாடு

அத்தியாயம் 04 – செயற்றிறன் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயற்றிறன்

அத்தியாயம் 06 – மனிதவள விபரம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01 – நிறுவன விபரம்/ நிர்வாக சுருக்கம்

1.1 அறிமுகம்

துரித அபிவிருத்தி முயற்சியில், அரச முதலீட்டு உபாயத்திற்கு அமைவாக இலங்கை பூராகவும் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உரிய நேரத்திலும் உரிய கிரயத்திலும் அடைந்துகொள்வதற்காக விஷேட கவனம் செலுத்துவது அவசியமாகும். மேலும், கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்படும் தடைகளை விலக்குவது தொடர்பாக உரிய காலத்தில் தர்க்கரீதியான மற்றும் அறிவுப்பூர்வமான தீர்மானங்களை எடுப்பதற்கு ஏற்ற வகையில் அக்கருத்திட்டங்களின் முன்னேற்றங்களை அறிக்கையிடுவதனூடாக வசதிகளை ஏற்படுத்துவது அவசியமாகும். அதற்கமைய, பொது முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வளங்கள் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பொது நிதியியல் முகாமைத்துவத்தில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு செயற்பாடு மிக முக்கியம் பெறுகின்றது. எனவே, இவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது சுமுகமான துரித அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு பொருத்தமான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளைச் செய்கின்றது.

1.2நிறுவனத்தின் தொலைநோக்கு,பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்

தொலைநோக்கு

வினைதிறன் வாய்ந்த அபிவிருத்தியை நோக்கி

பணிக்கூற்று

எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அனைத்து அபிவிருத்தி முனைவுகளையும் கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்.

குறிக்கோள்

வளங்களை உச்சளவில் பயன்படுத்துவதனூடாக உடன்பட்ட கால எல்லை மற்றும் செலவின மதிப்பீட்டிற்குள் எதிர்பார்த்த அபிவிருத்தி பெறுபேற்றை வழங்குதலை மேம்படுத்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

1. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்களை சேகரித்தல் மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
2. பாரிய மற்றும் விசால அளவிலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல்.

3. அபிவிருத்திப் பங்காளர்களுக்கு அவர்களது நிதி பங்களிப்பின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற நிலைமையை மதிப்பாய்வு செய்வதற்கான வசதியளித்தல்.

4. தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டப்பட்ட கருத்திட்டங்களின் பெறுபேற்றை அடைந்துகொள்வதனை சரிப்படுத்தலும் அவற்றின் முன்னேற்றங்களை உறுதிபடுத்துவதனூடாக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு உதவுதல்.
5. தேசிய மதிப்பீட்டு கொள்கையை அமுல்படுத்துவதற்கு வசதியளித்தல்.
6. பல்வேறு தரப்பினரதும் வேண்டுகோள்களுக்கமைய கருத்திட்டங்களை மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளுதல் மற்றும் பின்னூட்டத்தினை திட்டமிடல் செயற்பாடுகளுக்கு வழங்குதல்.
7. பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை அவதானித்து அவற்றின் அவற்றின் நிதித் தேவைகளை பரிந்துரைப்பதனூடாக நிதி அமைச்சின் நிதிப்பாய்ச்சல் செயற்பாட்டிற்கு உதவுதல்.
8. கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் அபிவிருத்தி தகவல்களை பரப்புதல்.

1.4 நிறுவனகட்டமைப்பு (இணைப்பு 1)

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்:

கருத்திட்டமுகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது ஐந்து தொழிநுட்பப் பிரிவுகள் மற்றும் இரண்டு உதவிச்சேவை பிரிவுகளாக பணிப்பாளர் நாயகம் மற்றும் ஐந்து மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

<u>தொழிநுட்பப் பிரிவுகள்</u>

i. கைத்தொழில் மற்றும் நிதி
ii. நீர் வழங்கல் மற்றும் மின் சக்தி
iii. விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்
iv. கல்வி மற்றும் சுகாதாரம்
v. பிரதேச மற்றும் மாகாண அபிவிருத்தி
vi. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை
vii. நிர்வாகம்

உதவிச் சேவை பிரிவு

i. நிர்வாக பிரிவு
ii. நிதி பிரிவு
iii. தகவல் தொழிநுட்பப் பிரிவு

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்தல்

அபிவிருத்தி கருத்திட்டங்களை கண்காணித்தல் வருடம் முழுவதும் இத்திணைக்களத்தினுள் செயற்படுத்தப்படும் பிரதான பணியாவதுடன் அம் முன்னேற்றங்கள் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்களுக்கு தெரியப்படுத்தும் செயற்பாடு காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. உலகலாவிய சுகாதார தொற்றை ஒழிப்பது தொடர்பாக மேற்கொள்ளபட்ட உபாயமார்கங்களான முடக்குதல், தனிமைப்படுத்துதல் மற்றும் சமூக இடைவெளி வீட்டிலிருந்து வேலை செய்தல் ஆகியவற்றின் காரணமாக அபிவிருத்தி கருத்திட்டங்களை கண்காணித்தல் இத்திணைக்களத்திற்கு 2021ம் வருடத்தில் சவால் மிக்கதாக காணப்பட்டது. அந்த சவாலான சூழ்நிலைகளுக்குள்ளும் திணைக்களத்தினால் 2021 வருடத்தில் திட்டமிடப்பட்ட முன்னேற்ற கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான பரிந்துரைகள் உள்ளடங்களாக முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டிற்குறிய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை சுருக்கி பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முடிந்துள்ளது.

2021ம் வருடத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிக்கமைய பல்வேறு நிரல் அமைச்சுக்களின் கீழ் 325 பெரிய மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதில் பாரிய அளவிலான கருத்திட்டங்கள் 210ம் பெரியளவிலான கருத்திட்டங்கள 115ம் அடங்குகின்றன. இம் 325 கருத்திட்டங்களும் 47 அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன் அவ் அமைச்சினூடாக மாதாந்தம் கருத்திட்டங்களை செயற்படுத்தும் அபிவிருத்தி தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்பாரிய மற்றும் பெரியளவிலான கருத்திட்டங்களுள், 187 கருத்திட்டங்கள் உள்நாட்டு கடன் மற்றும் நிதியினூடாகவும் 138 கருத்திட்டங்கள் வெளிநாட்டு கடன் மற்றும் நன்கொடைகளுடாகவும் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளன.

தொற்று நிலைமையுடன் ஏற்பட்ட சவாலான ஸ்திரத்தன்மை அற்ற நிதி நிலைமை, கட்டுமான உள்ளீட்டு பொருட்களின் பற்றாக்குறை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் ஆகிய தடைகள் காணப்பட்டாலும், 2021 நான்காவது காலாண்டு இறுதியாகும் போது நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 89 கருத்திட்டங்களுள் 32 கருத்திட்டங்களுக்கு இறுதி கருத்திட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு முடிந்துள்ளது.

அட்டவணை இல 2.1:மொத்த மதிப்பீட்டு செலவுக்கு அமைய கருத்திட்டங்களை வகைப்படுத்தல் (ரூ.மில்.)

மொத்த மதிப்பீட்டு செலவுக்கு அமைய பாரிய கருத்திட்டங்களை வகைப்படுத்தல் (ரூ.மில்.)						
மதிப்பிடப்பட்ட கருத்திட்ட பெறுமதி (ரூ.மில்.)	**1000-15000**	**15001-30000**	**30001-45000**	**45001-60000**	**60000க்கு அதிகம்**	**மொத்தம்**
கருத்திட்ட எண்ணிக்கை	243	41	16	9	16	325
வெளிநாட்டு	81	29	13	8	7	138
உள்நாட்டு	162	12	3	1	9	187

முன்னேற்றங்களை கண்காணிக்கும் செயற்பாடுகளின் போது தரவுகளை சேகரிப்பதில் பிரதான ஊடகமாக காணப்பட்ட திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி தகவல் அமைப்பினை புதிய தொழிநுட்பங்களை பிரயோகித்து புதுப்பிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொற்று நிலைமையினால் எதிர்ப்பார்க்கப்பட்ட வகையில் நிறைவு செய்ய முடியாமற் போனமையினால் 2021ம் ஆண்டின் வருடத்தில் கருத்திட்ட மீளாய்வு, அறிக்கையிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சனைகளை உரிய தரப்பினரை தொடர்புகொண்டு தீர்த்துக்கொள்வதற்காக விஷேட பிரயத்தனத்தை எடுக்கவேண்டி ஏற்பட்டது.

முன்னேற்ற மீளாய்வு செயற்பாட்டின்போது இணங்காணப்பட்ட சில கருத்திட்டங்களில் காணப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது. அதனால், கருத்திட்டங்களின் உண்மையான நிலைமைகளை கண்டறிவதற்காக நிரல் அமைச்சுகளினால் வழங்கப்படும் மாதாந்த மற்றும் காலாண்டுஅறிக்கைகள் மற்றும் உரியதரப்பினரருடன் நடாத்தப்படும் கருத்திட்டசெயற்றிறன் கூட்டங்கள் போதுமானதாக இல்லாதிருப்பதுடன், களவிஜயங்களை மேற்கொள்ளுதலினூடாக பெற்றுக்கொள்ளப்படும் அவதானிப்புக்கள் மிகமுக்கியமானதாகும். அதற்கமைய, இத்திணைக்களத்தினால் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் ஒவ்வொரு துறைகளின் கீழும் கள விஜய திட்டம் தயாரிக்கப்படும். எவ்வாறாயினும், நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை மற்றும் பயணக்கட்டுபாடுகளின் கீழ் 2021 வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த களவிஜயங்களில் அரைவாசியான அளவு மட்டுமே மேற்கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது. அதற்கமைய திட்டமிடப்பட்ட ஐம்பத்தொரு களவிஜயங்களில் அனைத்து துறைகளும் உள்ளடங்க கூடிய வகையில் இருபத்தொரு கள விஜயங்கள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன.

கள விஜய அவதானிப்புக்கள்

1. சுகாதார மற்றும் கல்வித் துறை பிரிவு




காலி, ஹெல்மட் கோல் மகப்பேற்று மருத்துவமனை கட்டுமானப் பணி



ஹபுகல, கப்பல் போக்குவரத்து மற்றும் கடற்படை ஆய்வுகள் நிறுவன கட்டுமானம் (றுகுணு பல்கலைக்கலகம்)

2. நீர் வழங்கல் பிரிவு



வில்கமுவ நீர்நிலைக் கட்டுமானம்



வில்கமுவ, நீர் சுத்திகரிப்பு கட்டுமானம்



கம்பஹா அத்தனகல்ல மினுவாங்கொட
ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்



நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு
மேம்படுத்தல் கருத்திட்டம் - கலிகமுவ

3. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் -

துறைமுக அணுகலுக்கான உயர் விரைவுச் சாலையின் கட்டுமானம்





4. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பிரிவு



கொழம்பகே மாவத்தை, வீடமைப்புத்திட்டம்



காளிங்க மாவத்தை, வீடமைப்புத்திட்டம்

5. விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்



வெல்லமன்கரை, புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்



வேல்லமங்கரை, புதிய மீன்பிடி துறைமுகம் கட்டுதல்

அட்டவணை இல 2.2 :கள விஜயங்களினூடாக

முன்னேற்றங்களை கண்காணித்தல் (2021.01.01 இலிருந்து 2021.12.31 திகதி வரை)

பிரிவு/ துறை	திட்டமிடப்பட்ட கள விஜயங்களின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட களவிஜயங்களின் எண்ணிக்கை	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள்
நீர் வழங்கல் மற்றும் மின்சாரம்	9	4	4
விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்	7	3	3
கல்வி மற்றும் சுகாதாரம்	17	12	12
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்	8	1	1
பிரதேச, மாகாண அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்	8	2	2
நிதி மற்றும் கைத்தொழில்	**2**	-	-
மொத்தம்	**51**	**22**	**22**

விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்

புதிய நிதி ஆதாரங்கள், கட்டமைப்பு காரணங்கள், விரைவான அபிவிருத்தி தெரிவுகள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் புதிய கருத்திட்டத்தின் அறிமுகத்தில் காணப்படும் கருத்திட்ட பிரச்சனைகளை ஆய்வு செய்வதனை போலவே கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதனூடாக அரச முதலீட்டின் எதிர்ப்பார்க்கப்பட்ட பெறுபேற்றை உரிய காலத்தில் உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதனை நோக்கமாக கொண்டு இத்திணைக்களத்தினால் கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அபிவிருத்திப் பங்காளிகள், நிரல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் நிதி அமைச்சின் ஏனைய திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தகர்களின் பங்குபற்றலுடன் விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றது.

மேலும், 2021 வருடத்தினை ஒட்டுமொத்தமாக கவனத்தில் கொள்ளப்படும் போது நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமையினுள், சுகாதார அறிவுறுத்தலுக்கமைய, இத்திணைக்களத்தினால் ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் 48 விஷேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் அவற்றினூடாக அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள், காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், கேள்வி நடைமுறைகளை விரைவுபடுத்தல் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான பிரச்சனைகளை தீர்த்தல் ஆகிய நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு மற்றும் செயற்றிறனாக மேற்கொள்ளுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வழங்குவதனூடாக தொடர்ச்சியாக வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றது.

அட்டவணை இல **2.3**: நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விஷேட கூட்டங்களின் முன்னேற்றம்
(2021.01.01 இலிருந்து **2021.12.31** திகதி வரை)

கூட்டங்கள்/கலந்துரையாடல் வகைகள்	தொகை
கருத்திட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கான குழு (CRIP) கூட்டங்கள்	3
பாரிய மற்றும் பெரியளவிலான கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான குழு கூட்டங்கள்	2
முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்	16
துறைசார் கூட்டங்கள்	**4**
பிரதான நிறுவனங்களுடனான கூட்டங்கள்	**6**
கருத்திட்ட கண்காணிப்புக் குழு /கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்	19
வேறு விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்	**14**
நிதி வழங்கும் நிறுவனங்களுடனான மீளாய்வுக் கூட்டங்கள்	2
மொத்தம்	**66**

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரச்சனைகள் காரணமாக ஒத்துக்கொள்ளப்பட்ட காலம் மற்றும் செலவு மதிப்பீட்டிற்குள் கருத்திட்டங்களை நிறைவு செய்தல் சவாலான விடயமாக அவதானிக்கப்படுகின்றது. அதனால், அமைச்சரவை முன்மொழிவுக்கமைய முன்னால் நிதி, மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரின் பங்குபற்றலுடன் மற்றும் நிதி, நெடுஞ்சாலைகள், நீர்பாசனம், நீர்வழங்கல், வலுசக்தி மற்றும் சுற்றுச்சூழல் சிரேஷ்ட அமைச்சுக்களின் செயலாளர்களை கொண்டு கருத்திட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கான குழுவை(CRIP)ஸ்தாபித்தல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக காணப்படுகின்றது. இக்குழுவினூடாக 25 கருத்திட்டங்களின் பிரச்சனைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்ட மீளாய்வுகள்

அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அபிவிருத்திப் பங்காளிகளின் வசதிகளை எளிதாக்கும் பணிகள் இத்திணைக்களத்தின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தினுள் இருக்கும் பிரதான பிரிவாகும். ஆறு அபிவிருத்திப் பங்காளிகளுடன் வருடாந்தம் நடாத்தப்படும் மீளாய்வினூடாக கருத்திட்டங்களை விரைவுபடுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி பெறுபேறுகளை உரிய காலத்தில் அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

அதற்கமைய, 2021 வருடத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), மற்றும் இந்திய அரசின் நன்கொடைகள் மூலம் செயற்படுத்தப்படும் 29 கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் நிகழ்நிலை முறைமையினூடாக மீளாய்வு செய்யப்பட்டன. அதனூடாக கருத்திட்டங்களில் காணப்படும் சவாலான பிரச்சனைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதினூடாக வினைதிறனான கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு பங்களிப்பு வழங்க முடிந்தது. சமகாலத்தில் பரவி வந்த வைரஸ் தொற்று காரணமாக திட்டமிடப்பட்டதற்கமைய ஏனைய அபிவிருத்தி பங்காளர்களுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தி மீளாய்வுகளை நடாத்துவதற்கு முடியாமல் போனது.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் சட்டகத்தை தயாரிப்பதன் முன்னேற்றம்

பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அரச உத்தியோகத்தர்களின் தலையீட்டிற்கமைய மதிப்பீடு பற்றிய தேசிய கண்காணிப்பு குழு ஒன்றினை நியமித்து அதனது வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புடன் இத்திணைக்களத்தினால் 2019ம் வருடத்தில் தேசிய மதிப்பீட்டு கொள்கை தயாரிக்கப்பட்டு கௌரவ பிரதமரின் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இத் தேசிய மதிப்பீட்டு கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள், தரநிலைகள், மதிப்பீட்டு நெறிமுறைகள், நிறுவன கட்டமைப்புக்கள், மதிப்பீட்டு நிகழ்ச்சி நிரல், முறையான மூலோபாய சேர்க்கைகளை உள்ளடக்கி தேசிய மதிப்பீட்டு கொள்கையை நடைமுறைப்படுத்தும் சட்டகத்தை தயாரிப்பதற்கான செயற்பாடுகள் அமைச்சரவையின் கட்டளைக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் பேரில் திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களினால் ஆங்கில மொழியில் பிரதி ஒன்று 2020ம் வருடத்தில் வரைவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இத்தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் சட்டகம் வெளியடப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளது.

பிரதேச அபிவிருத்தி நிகழிச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்

பிரதேச அபிவிருத்தி நிகழிச்சித்திட்டங்களின் ஒருங்கிணைத்தலிலுள்ள முக்கியத்துவம் கவனத்திற்கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றங்களை தேசிய மட்டத்தில் மீளாய்வு செய்து உரிய நிறுவனங்களுக்கு அறிக்கையிடும் பொறுப்பு இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

நிலவிய கொவிட் வைரஸ் நிலைமையின் போதும் 2021 வருடத்தில் மேற் கூறப்பட்ட வேலைத்திட்டமானது நாடு முழுவதும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து 225 பாராளுமன்ற அமைச்சர்களின் கீழ் இணங்காணப்பட்ட 30,767 கருத்திட்டங்களில் 30,193 கருத்திட்டங்கள் வெற்றிகரமாக மக்கள் உரிமைக்கு வழங்கப்பட்டன. இது 10,871 கட்டுமான கருத்திட்டங்களையும் மற்றும் 19,322 கொள்முதல் கருத்திட்டங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. மேற் கூறப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ் பயனடைந்த முழு பயனாளர்களின் எண்ணிக்கையானது 07 மில்லியனுக்கும் அதிகமானதாகும்.

அதற்கமைய, மாவட்ட செயலகங்களில் திட்டமிடல் அலகுகளை இணைத்துக் கொள்வதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய அதன் அடிப்படையில் அக்கருத்திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய நிலைமை அறிக்கைகள் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்காக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை பிரசுரித்தல்.

அபிவிருத்தி கருத்திட்ட வேலைத்திட்டங்களின் செயலாற்றுகை பற்றிய முன்னேற்ற அறிக்கைகள் இத்திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதனுடன் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுடன் அனைத்து காலாண்டு முடிவடையும் போதும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இவ்வமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் பற்றி இத்திணைக்களத்தின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச செலவினம் மற்றும் வளங்களின் செயற்றிறன் வினைதிறன் மிக்க பயன்பாடு பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு, சிவில் அமைப்புக்களுக்கு மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உரிய முன்னேற்ற அறிக்கைகள் திணைக்கள இணையத்தளத்தில் (www.pmm.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் 3 – வருடத்தின் மொத்த நிதி செயற்றிறன்


3.1 பாதீட்டு தகவல்

2021 ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கப்பட்ட செலவு மதிப்பீடு மற்றும் 2021 வருடத்திற்கான செலவின வரைபு இலக்கம் 01 மற்றும் அட்டவணை 3.1 இனூடாக காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை இல 3.1: பாதீட்டு தகவல் (2021.12.31 திகதியில்) மூலதனம் மற்றும் மீண்டு வரும் செலவினம் - (ரூபா.மில்)

வகை	மதிப்பிடப்பட்ட செலவினம்	உண்மையான செலவினம்
மீண்டுவரும் செலவினம்	98.51	88.70
மூலதன செலவினம்	60.18	17.93
மொத்தம்	**158.69**	**106.63**

வரைபு இல 3.1 : பாதீட்டு தகவல் - 2021.12.31 திகதியில்



3.2 வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை



ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உள்ளக நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	நிறைசேரி பணிமுற்பணங்கள்		117,219,000	91,370,000.00	ஏசீஏ-3
-	வைப்புகள்		740,202	59,865.00	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		6,218,320	5,819,387.00	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		3,610,574	3,638,023.00	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		127,788,096	100,887,275.00	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		127,788,096	100,887,275	
	நிறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		13,650,704	76,673.00	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		114,137,392	100,810,602.00	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்				
68,550,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய வழியல் அனுகூலங்கள்	5	60,687,762	63,193,482.00	
29,260,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	27,524,279	28,467,557.00	ஏசீஏ-2(ii)
700,000.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	490,082	727,359.00	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
98,510,000.00	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		88,702,123	92,388,398.00	
	மூலதனம் செலவினம்				
-	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	-	-	
3,000,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	211,377	218,320.00	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
3,900,000.00	நிறை விருத்தி	14	148,000	50,000.00	
213,280,000.00	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	17,574,566	1,474,959.00	
220,180,000.00	மொத்த மூலதனம் செலவினம் (எ)		17,933,943	1,743,279.00	
	வைப்புக் கொடுப்பனவுகள்		65,008	58,865.00	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		8,007,519	3,620,362.00	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		8,072,527	3,679,227.00	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		114,708,593	97,810,904	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(571,202)	2,999,698.00	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(571,202)	2,999,698.00	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி				ஏசீஏ-3

1

3.3 நிதி நிலைமைக் கூற்று

ஏசீடி -I

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீடி-6	84,310,896	68,239,102
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீடி-5/5டி	12,455,454	10,665,254
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீடி-3	-	-
மொத்த சொத்துக்கள்		**96,766,350**	**78,904,356**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திரைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		11,779,260	10,665,254
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		84,310,896	68,239,102
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீடி-5டீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீடி-4	676,194	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீடி-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**96,766,350**	**78,904,356**

பக்க இலக்கம் 01 முதல் 38 வரை ஏசீடி 1 முதல் ஏசீடி 7 வரையான மாதிரிப் படிவங்களின் முலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 39 முதல் 46 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் முலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அவசியமாக அந்தத் தொகுதியை விளைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அமுக்கு மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி:	பதவி:	பெயர்:
திகதி: 25/02/2022	திகதி: 22-02-2022	திகதி: 22-02-2022
W.H. Karunaratna Secretary Ministry of Development Co-ordination and Monitoring	Ayanthi De Silva Director General ...of Project Management & Monitoring ...ry	K. Piratheepan Director Department of Project Management & Monitoring General Treasury Colombo 01

2

3.4 காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீடு- சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	திருத்தப்பட்ட
	2021 ரூபா	2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	24,059
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	3,610,574	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	117,219,000	91,370,000
முற்பணங்களை அறவிடல்	3,192,882	192,475
வைப்புக்களின் பெறுகை	740,202	58,865
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**124,762,658**	**91,645,399**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	88,205,541	84,922,555
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	490,082	727,359
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	280,000	2,028,868
நிறைசேர்க்குத் திருப்பப்பட்ட பணமுற்பணம்	13,650,704	76,673
முற்பணக் கொடுப்பனவு	4,137,380	2,088,800
வைப்புக் கொடுப்பனவு	65,008	57,865
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**106,828,715**	**89,902,120**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**17,933,943**	**1,743,279**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொதிக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பொதிகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	17,933,943	1,743,279
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**17,933,943**	**1,743,279**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(17,933,943)**	**(1,743,279)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்நாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஏ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அளவு (ஓ)=(எ)+(ஏ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.5 நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்காளது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) **நிதிக் கூற்றுக்களுக்கான படிவங்களில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்**

2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

7

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.

அட்டவணை இல 3.2

ரூபா. '000

வருமானகுறியீடு	வருமான குறியீடு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக%
இத்திணைக்களம் வருவாய் சேகரிக்கும் திணைக்களம் அல்ல.					

3.7 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

அட்டவணை இல 3.3

ரூபா. '000

ஒதுக்கீடு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டுவரும்	95, 510, 000	98, 510, 000	88, 702, 123	90
மூலதன	217, 180, 000	60, 180, 000	17, 933, 943	30

3.8 நி.பி .குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

அட்டவணை இல 3.4

ரூபா. '000

தொடர் இல.	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட அமைச்சு/ திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	நிதி அமைச்சு	பட்டதாரிபயிலுனர் கொடுப்பனவு	–	–	–	–
02	பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	பட்டதாரிபயிலுனர் கொடுப்பனவு	280,000	280,000	280,000	100%

03	தேர்தல் ஆணையகம்	தேர்தல் செலவு	–	–	–	–

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

அட்டவணை இல 3.5

ரூபா. '000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2020 திகதிக்கு சொத்து மீளாய்வு அறிக்கைக்கமைய மீதி	31.12.2020 திகதியில் நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	**கட்டிடம் மற்றும் கட்டமைப்பு**	-	-	-	
9152	**இயந்திரம் மற்றும் உபகரணம்**	**84, 310, 896**	**84, 310, 896**	-	**100%**
9153	**காணி**	-	-	-	
9154	**அருவச் சொத்துக்கள்**	-	-	-	
9155	**உயிரியல் சொத்துக்கள்**	-	-	-	
9160	**குறை வேலைகள்**	-	-	-	
9180	**குத்தகைச் சொத்துக்கள்**	-	-		

3.10 கணக்காய்வாளர் அறிக்கை

** ** பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்போது, கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையானது ஸ்கேன் செய்யப்பட்டு **(SCAN)** இங்கே சேர்க்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 திணைக்களத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்ட அடிப்படையில்)

அட்டவணை இல 4.1 : திணைக்களத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (2021.12.31 திகதியில்)

விஷேட குறிகாட்டிகள்	உண்மையான வெளியீடு (%)எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக		
	100%- 90%	75% -89%	50%-77%
முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்ட கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	√		
தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உரியகாலத்தில் வழங்கப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	√		
பிரச்சனைகளை தீர்ப்பதற்காக வெளிநாட்டு நிதியுதவியளிக்கும் நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் எண்ணிக்கை			√
மேற்கொள்ளப்பட்ட களவிஜயம் மற்றும் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கையும்			√
தேசிய மதிப்பீட்டு கொள்கை கட்டமைப்பின் உருவாக்கல் மட்டம்/நிலை	√		
தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தினை மதிப்பீடும் செயற்பாட்டில் ஈடுபடும் மட்டம்/நிலை	இச்செயற்பாடானது வைரஸ் தொற்று நிலைமை காரணமாக நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.		
பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பிரச்சனைகள் மற்றும் முன்னேற்றங்கள் சம்பந்தமாக வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை			√
அலுவலக உத்தியோகத்தர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்காக ஈடுபடுத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	√		

அத்தியாயம் 5 – நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை (SDG)

நிலையான அபிவிருத்தியின் இலக்குகளை அடைந்துக்கொள்வதற்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை அடைந்து கொள்தலின் முன்னேற்றங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் சம்பந்தமாக திணைக்களத்தினால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் அட்டவணை இல 5.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 5.1: நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

இலக்கு/ குறிக்கோள்	இலக்குகள்	வெற்றியின் குறிகாட்டிகள்	தற்போது வரை அடைந்துள்ள வெற்றியின் முன்னேற்றம்		
			0% - 49%	50%- 74%	75%- 100%
16	16.6 16.7 16.8 16.10	1. இணைய அடிப்படையிலான தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பிற்காக பிரவேசித்த பங்குதாரர்களின் எண்ணிக்கை	தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பு தயாரிப்பு மட்டத்தில் உள்ளது		
		2. இணைய அடிப்படையிலான தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பின் பிரவேசத்திற்கு காணப்பட்ட இடையூறு பற்றிய அறிக்கைகள்			
		3. மதிப்பீட்டு வெளிப்படுத்தல்களுக்கு இலகுவான பிரவேசம்	√		
		4. இணைய அடிப்படையிலான தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பிற்கு உரிய சந்தர்ப்பத்தில் பிரவேசிப்பதற்கு காணப்பட்ட இடையூறு பற்றிய அறிக்கைகள்	தகவல் அமைப்பு தயாரிப்பு மட்டத்தில் உள்ளது		
		5.அபிவிருத்தி பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த கருத்திட்ட மதிப்பாய்வுகளின் எண்ணிக்கை	√		
		6. அபிவிருத்தி பங்குதாரரிடம் காணப்படும் தகவல்களுக்கான பிரவேசம்	√		
17	**17.8** **17.16** **17.17**	**1.**அபிவிருத்தி கருத்திட்டங்கள் சம்பந்தமாக பரிமாறிக்கொள்ளப்பட்ட தகவல்களை பராமரித்தல்			√
		2. சிறந்த நடைமுறைகள் (கருத்திட்டம்) பற்றிய தகவல்களை பராமரித்தல்		√	

அத்தியாயம் 6- மனித வள விபரம்

6.1 ஊழியர் எண்ணிக்கையின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் ஆளணி பற்றிய விபரம்

2021.12.31 திகதியில் திணைக்களத்தின் ஆளணி பற்றிய விபரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

அட்டவணை இலக்கம் 6.1: ஆளணி பற்றிய விபரம் (2021.12.31 திகதியில்)

ஆளணியினரை வகைப்படுத்துதல்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதைய ஆளணி	வெற்றிடங்கள்
சிரேஸ்ட வகுப்பு உத்தியோகத்தர்கள்	31	24	07
மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள்	04	0	04
இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள்	47	30	17
ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள்	20	17	03
மொத்தம்	**102**	**71**	**31**

6.2 ஆளணி வெற்றிடங்கள்

